

சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூரில் மாவட்டக் கழக செயலாளர் கூட்டுறவுத் துறை அமைச்சர் கே ஆர்.பெரியகருப்பன் தலைமையில் இன்று 12ம் தேதி நடைபெறும் ஆர்ப்பாட்டம் குறித்து நடைபெற்ற ஆலோசனை கூட்டத்தில் மதச் சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சியினர் கலந்து கொண்டார்கள்.




திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் நகராட்சி அரசு மருத்துவமனை அருகில் பயணியர் நிழற்குடையை அமைச்சர் அர.சக்கரபாணி திறந்து வைத்தார்.




இராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடி சட்டப்பேரவை தொகுதி சத்திரக்குடியில் ஸ்டாலின் தொடரட்டும் தமிழ்நாடு வெல்லட்டும் பொதுக்கூட்டம் மாவட்ட கழக செயலாளர் காதர்பாட்ஷா முத்துராமலிங்கம் தலைமையில் நடைபெற்றது. பரமக்குடி சட்டப்பேரவை உறுப்பினர் செ.முருகேசன், சத்தியமூர்த்தி, சுந்தரராஜன், திசைவீரன், குணசேகரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கே.கே.கதிரவன் வரவேற்புரையாற்றினார். ஏ.கே.எஸ். விஜயன் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். இக்கூட்டத்தில், வாசுதேவன், குணசேகரன், சக்தி, கிருஷ்ணமூர்த்தி, அண்ணாமலை, தமிழ்ச் செல்வி போஸ், துணைச் சேர்மன் அய்யனார். பூமிநாதன், சேது கருணாநிதி, ஜீவ ரெத்தினம், ஆர்.கே. கார்மேகம், பிரவீன் தங்கம், அகமது தம்பி, கருப்பையா மற்றும் மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர் பேரூர் மற்றும் கிளைக் கழக நிர்வாகிகள் பொதுமக்கள் கலந்து கொண்டனர். கூட்ட நிறைவில் ஸ்டாலின் தொடரட்டும் தமிழ் நாடு வெல்ட்டும் உறுதி மொழி எடுத்துக் கொண்டனர்.



தூத்துக்குடி மாவட்டம் எட்டையாபுரம் மகாகவி பாரதியார் நூற்றாண்டு நினைவு அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளியில் பயிலும் 199 மாணவிகளுக்கு திராவிட மாடல் அரசின் விலையில்லா மிதிவண்டியினை விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர்,ஜீ.வி. மார்க்கண்டேயன் வழங்கி சிறப்புரையாற்றினார். நிகழ்வில் பள்ளி தலைமை ஆசிரியை மகாலட்சுமி, ஒன்றிய செயலாளர்கள் கோவில்பட்டி நவநீதக்கண்ணன், விளாத்திகுளம் சின்னமாரிமுத்து, விளாத்திகுளம் இம்மானுவேல், உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



மதுரை வடக்கு மாவட்டம் மேலூர் தொகுதி மேலூரில் "தமிழ்நாடு தலைகுனியாது" மாபெரும் பரப்புரை பொதுக்கூட்டம் வடக்கு மாவட்ட செயலாளர் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி தலைமையில் நடைபெற்றதில் வனத்துறை அமைச்சர் ஆர்.எஸ்.ராஜ கண்ணப்பன் சிறப்புரை ஆற்றினார். உடன் மேலூர் தொகுதி பொறுப்பாளர் ஆனந்த், தலைமைச் செயற்குழு உறுப்பினர் கரு தியாகராஜன், நகர செயலாளர் முகமது யாசின், மாநில இலக்கிய அணி துணை செயலாளர் நேருபாண்டியன் உள்ளிட்ட திரளான கழக நிர்வாகிகள் கழகத்தினர் ஆயிரக்கணக்கான பொதுமக்கள் பங்கேற்றனர்.



மதுரை வடக்கு சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட மாநகராட்சி 23 வது வார்டு பாக்கியநாதபுரம் பகுதி மக்களின் கோரிக்கையை ஏற்று வடக்கு சட்டமன்ற தொகுதி உறுப்பினர் மேம்பாட்டு நிதியிலிருந்து ரூபாய் 8 லட்சம் மதிப்பீட்டில் புதிதாக அமைக்கப்பட்ட சிறுவர் பூங்காவினை கோ.தளபதி எம்.எல்.ஏ. பொதுமக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்து இனிப்புகள் வழங்கினார். இந்நிகழ்வில் கழக நிர்வாகிகள் மூவேந்திரன், குரும்பன், பவுன்ராஜ், ஏ.கே.ஆறுமுகம், முத்து கணேசன், கருப்பு, சந்துரு, ராஜேஷ் என்ற பாக்யராஜ், கருணாநிதி உள்ளிட்ட திரளான பொதுமக்கள் பங்கேற்றனர்.



இராமநாதபுரம் சட்டமன்றத் தொகுதி கீழக்கரை நாகராட்சியில் மிகவும் பழமை வாய்ந்த சதக்கத்துன் ஜாரியா நடுநிலைபள்ளியில் ஆய்வு மேற்கொண்டு மாணவ செல்வங்களுடன் இராமநாதபுரம் மாவட்ட கழக செயலாளர் சட்டமன்ற உறுப்பினர் காதர்பாட்சா முத்துராமலிங்கம் கலந்துரையாடினார். இந்நிகழ்வில் மக்கள் பிரதிநிதிகள் கழக நிர்வாகிகள் ஆசிரியர் பெருமக்கள் அனைவரும் உடனிருந்தனர்.

### ஒன்றிய பட்ஜெட்டில் தமிழ்நாட்டை வஞ்சித்த பா.ஜ.க.! துணை போகும் அ.தி.மு.க.வைக் கண்டித்து

# இராமநாதபுரம் மாவட்டத்தில் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சார்பில் மாபெரும் ஆர்ப்பாட்டம்!

## மாவட்டக் கழக செயலாளர் காதர்பாட்சா முத்துராமலிங்கம் எம்.எல்.ஏ., அறிவிப்பு!

*இராமநாதபுரம், பிப்.12-*

கழக தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, தமிழ்நாடு துணை முதல்வர் கழக இளைஞர் அணி செயலாளர், இளந்தலைவர் அவர்கள் அறிவுறுத்தலின்படியும், தலைமைக்கழக அறிவிப்பின்படி இராமநாதபுரம் மாவட்டத்தில் அனைத்து ஒன்றியம், நகரம், பேரூர் கழகங்களில் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கட்சிகள் சார்பில் இன்று (12.02.2026 -வியாழன்கிழமை) மாலை 04.00 மணி அளவில் ஒன்றிய பட்



ஜெட்டில் தமிழ்நாட்டை வஞ்சித்த பாஜக! துணை போகும் அ.தி.மு.க.வை கண்டித்து இராமநாதபுரம் மாவட்டத்தில் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கட்சிகள் சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறவுள்ளது.

இக்கண்டன ஆர்ப்பாட்டத்தில் இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சி மாநில, மாவட்ட நிர்வாகிகள் உள்ளிட்ட கூட்டணி கட்சி தோழர்கள், கழக மாநில, மாவட்ட நிர்வாகிகள் ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு. பொதுக்குழு உறுப்பினர்கள், அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள், அணிகளின் நிர்வாகிகள், கிளைக் கழக, வார்டு கழக செயலாளர்கள், முன்னாள் இந்நாள் உள்ளாட்சி பிரதிநிதிகள், BLA2, BDA, உள்ளிட்ட கழக தோழர்கள் அனைவரும் அவரவர் எல்லைக்கு உட்பட்ட பகுதிகளில் தவறாது கலந்து கொண்டு தங்களது கண்டனத்தை பதிவு செய்திடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு. மாவட்டக் கழக செயலாளர் காதர் பாட்சா முத்துராமலிங்கம் கேட்டுக் கொண்டுள்ளார்.

## கரூரில் காலை உணவுத் திட்டம் தொடக்கம்

கரூர், பிப்.12–

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் திருவள்ளூர் மாவட்டத்தில், தூய்மைப் பணியாளர்களுக்கு காலை உணவு திட்டத்தை விரிவுபடுத்தி தொடங்கி வைத்ததையடுத்து,

கரூரில் சட்டமன்ற உறுப்பினர் வி. செந்தில் பாலாஜி சின்ன கொங்கு மன்றத்தில் தூய்மைப் பணியாளர்களுக்கு காலை உணவு வழங்கும் திட்டத்தை தொடங்கி வைத்து உணவு பரிமாறினார். அருகில் ஆட்சியர் மீ. தங்கவேல், மேயர் கவிதா கணேசன், ஆணையர் சுதா, மண்டல குழு தலைவர்கள் எஸ். பி. கனகராஜ், அன்பரசன், மற்றும் மாமன்ற உறுப்பினர்கள் உள்ளனர்.

## மதுரை மாநகர் மாவட்டம்

# எல்லீஸ் நகர் பகுதி, 61வது வட்டம் மற்றும் மேல மாசி வீதி பகுதி, 77வது வட்டம் ஆகிய வட்டக் கழகப் பொறுப்பாளர்கள் நியமனம்!

## தலைமைக் கழக அறிவிப்பு!

மதுரை மாநகர் மாவட்டம், எல்லீஸ்நகர் பகுதி, 61வது வட்டக் கழகச் செயலாளர் பி.கே.செந்தில் அவர்கள் பகுதிக் கழகச் செயலாளராக பொறுப்பு வகிப்பதால், அவரை வட்டச் செயலாளர் பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்குப் பதிலாக திரு. க.சுரேஷ் (10சி, ஜவஹர் 1வது தெரு, எஸ்.எஸ்.காலனி, மதுரை-10) அவர்கள் 61வது வட்டக் கழகப் பொறுப்பாளராகவும்;

மேல மாசி வீதி பகுதி, 77வது வட்டச் செயலாளர் திருமுருகன் மறைவெய்திய காரணத்தால், கழகப் பணிகள் செவ்வனே நடைபெற திரு.சோ.தஞ்சைமதி, (காஜா தெரு, எம்.கே.புரம், மதுரை-11) அவர்கள் 77வது வட்டக் கழகப் பொறுப்பாளராகவும் நியமிக்கப்படுகிறார்கள்.

ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்ட அந்தந்த வட்டக் கழக அமைப்பின் பிற நிர்வாகிகள் இவர்களுடன் இணைந்து பணியாற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 10.02.2026

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.